கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 01.03.2025

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் "வேளாண்மைக் கல்வி மற்றும் ஆராய்ச்சியில் தர உறுதி" குறித்த பயிற்சி

"வேளாண்மைக் கல்வி மற்றும் ஆராய்ச்சியில் தர உறுதி" குறித்த மூன்று நாள் பயிற்சி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்குநரகத்தால் கடந்த 26.2.2025 முதல் 28.2.2025 வரை பல்கலைக்கழக வளாகத்தில் நடத்தப்பட்டது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் இர.தமிழ்வேந்தன், அவர்கள் இப்பயிற்சியைத் துவக்கி வைத்து பேசுகையில், ஒரு வேளாண் நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கு, வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சியில் திறமையான வல்லுநர்களின் பங்களிப்பு முக்கியப் பங்கு வகிக்கிறது என்று கூறினார். மேலும் அவர் கூறுகையில், பாடத்திட்டம் உருவாக்கல், கற்பித்தல் முறை மற்றும் ஆராய்ச்சி முறைகளில் தொடர்ந்து தர நிலையைத் உறுதிப்படுத்த புதிய தொழில்நுட்பங்கள் உள்ளடக்கிய இது போன்ற பயிற்சிகள் பேராசிரியர்களுக்கு வழங்குவது இன்றியமையாததாகிறது என்றார்.

திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்குநர் முனைவர் பி. ஜெயகுமார் அவர்கள், இப்பயிற்சியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்ததுடன், இது போன்ற பயிற்சிகள் பேராசிரியர்களுக்கு அளிப்பதன் மூலம் வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சிகளில் உயர் தரத்தை எட்ட முடியும் என்றார்.

முனைவர் எஸ். செந்தில் விநாயகம், தலைமை நிர்வாக அதிகாரி (a–IDEA) மற்றும் தலைவர், கல்வி முறை மேலாண்மை, இந்திய வேளாண் ஆராய்ச்சி மேலாண்மை கல்விக்கூடம் (NAARM) அவர்கள் உழவர்களின் கள பிரச்சனைகளுக்குப் பயனளிக்கும் புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குவதற்குச் சிறந்த திறன்களை வளர்த்துக் கொள்ள வலியுறுத்தினார்.

வேளாண் நானோ தொழில்நுட்ப மைய பேராசிரிர் மற்றும் தலைவர் முனைவர் வி. கோமதி அவர்கள், வேளாண் தொழில்நுட்பங்களைச் சமீபத்திய முன்னேற்றமான தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களை இணைத்து வேளாண் மக்களின் தொழில்நுட்பத் தேவையைப் பூர்த்திச்

செய்ய ஏதுவாக இப்பயிற்சிப் பாடங்கள் உருவாக்கப்பட்டதுடன், வேளாண் வல்லுநர்களின் ஆரோக்கியத்தையும் கருத்தில் கொண்டு, மனஅழுத்த மேலாண்மையும் சேர்த்திருப்பது வரவேற்கத் தக்கது என்றார்.

பேராசிரியர் மா.இரா. சீனிவாசன் (வேளாண் பூச்சியியல்) அவர்கள் வரவேற்புரையும், பேராசிரியர் த. சம்சாய் (வேளாண் ஊரக மேலாண்மை) அவர்கள் நன்றியுரையும் வழங்கினர்.

பல்கலைக்கழக வல்லுநர்கள் மற்றும் பிற அரசு மற்றும் தனியார் நிறுவன வல்லுநர்களின் உதவியோடு, வேளாண் கல்வி மற்றும் வடிவமைப்பு குறித்தச் சிந்தனைகள், தர உறுதிப்பாட்டிற்கான அங்கீகாரம் மற்றும் தர வரிசை, கல்வி தணிக்கை, மதிப்பீடு, தர உறுதிப்பாட்டிற்கான அங்கீகாரம் மற்றும் தர வரிசை, நிதி மேலாண்மை, இலக்க முறை (எண்ணிமம்) கற்பித்தல் தொழில்நுட்பங்கள், நிதிநிலைத் தணிக்கை, திறந்த வெளி மூலக்கருவிகள் மற்றும் இணைய வளங்கள், வளர்ந்து வரும் வேளாண்மைச் சுற்றுச்சூழல் அமைப்பு சார்ந்த தர ஆராய்ச்சி, தரமான உயர் கல்விக்கான கலப்பு முறை கற்றல் நுட்பங்கள், இணைய (cyber) பாதுகாப்பு, வேளாண் ஆராய்ச்சிகளை மேம்படுத்துதல், தரவு பகுப்பாய்வு, தரவை விளக்குதல் மற்றும் குறிப்பு மேலாண்மை போன்ற சமீபத்திய தொழில் நுட்பங்கள் மட்டுமின்றி மன அழுத்த மேலாண்மைக் குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது.

இப்பயிற்சியின் நிறைவு விழாவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உயிர் தொழில் நுட்ப மகத்துவ மையத்தின் திட்ட இயக்குநர், முனைவர் எஸ். மோகன்குமார் அவர்கள், இப்பயிற்சியில் பங்கேற்றவர்களைப் பாராட்டி வாழ்த்தினார்.

மேலும், இவர் கூறுகையில் மாணவர்களின் கற்பித்தலை மேம்படுத்துவதற்கும், கல்வித் தரத்தை உயர்த்துவதற்கும், உயர் கல்வியில் தர நிர்ணயம் முக்கியமானதாகும் என்றார். கல்வி மற்றும் நிறுவனத்தின் தரத்தை உறுதிபடுத்துவதற்கு இது போன்ற புத்தாக்கப் பயிற்சிகள் முக்கியமானதாகக் கருதப்படுகிறது என்றார். மேலும், தனது அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டு, கல்வி மற்றும் ஆராய்ச்சியில் புதிய முன்னேற்றங்களை ஏற்க ஊக்குவித்தார்.

திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்குநர் முனைவர் பி. ஜெயகுமார் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் தேர்வு கட்டுப்பாட்டாளர் முனைவர் வி.பாலசுப்ரமணி, ஆகியோர் இவ்விழாவில் பங்கேற்று தங்களது வாழ்த்துரையினை வழங்கினர்.

இதுவரை 16 தொடர் பயிற்சிகள் பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உறுப்பு கல்லூரி முதல்வர்கள், அண்ணாமலைப் பல்கலைக்கழக பேராசிரியர்கள், மற்றும் நேபாளத்தில் உள்ள திரிபுவன் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

உதவி பேராசிரியர் திருமதி இரா. சசிகலா (இதழியல்) அவர்கள் வரவேற்புரையாற்றினார். இணைபேராசிரியர் முனைவர் க. கணேசன் (வேளாண் பூச்சியியல்) தனது நன்றி உரையினை வழங்கினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**